# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,727 — 1959 අප්‍රේල් 17 වැනි සිකුරාදා — 17.4.1959**

11,727 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாய்ச்சல் இலாகா

மாத்தளைப் பகுதியிலுள்ள பகலவெல அமுன கட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 29 ம் திகதி காலை 10 மணியளவில் கண்டி பொறியியலாளரின் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் சித்திரை மாதம் 28 ம் திகதி வரையும் இவ்விலாகாவில் 6000 மும் அதற்கு மேற்படவும் பதிவு செய்த ஒப்பந்தக்காரருக்கு மாத்தளை நீர்ப்பாய்ச்சல் இலாகாவிலும் கண்டி பொறியியலாளரின் கந்தோரிலும் வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்களை மாத்தளை நீர்ப்பாய்ச்சல் உப—கந்தோரில் அறிந்து கொள்ளப்படும்.

சி. து. ரா. சிங்கம்,
எஸ். டி. ஓ. மாத்தளை.

நீர்ப்பாய்ச்சல் இலாகா,
மாத்தளை.

---

### நீர்ப்பாசன இலாகா

மாத்தளையில் " சீனியர் இஸ்ராவ் குவாற்றர் " கட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 29 ம் திகதி காலை 10 மணியளவில் கண்டி பொறியியலாளரின் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் சித்திரை மாதம் 28 ம் திகதி வரையும் இவ்விலாகாவில் 26,000 ரூபாவுக்கும் அதற்கும் மேற்படவும் பதிவு செய்த ஒப்பந்தக்காரருக்கு மாத்தளை நீர்ப்பாய்ச்சல் இலாகாக் கந்தோரில் வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்களை மாத்தளை நீர்ப்பாய்ச்சல் உப கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சி. து. ரா. சிங்கம்,
எஸ். டி. ஓ. மாத்தளை.

நீர்ப்பாய்ச்சல் இலாகா,
மாத்தளை.

---

### நீர்ப்பாசன இலாகா

மேற்குப் பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர், கொட்டா தெரு கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 12 ந் திகதிவரை, சப்ரகாமுவ மாகாணத்தைச் சேர்ந்த இரத்தினபுரிப் பகுதியிலுள்ள வலாங்கொடையில் நீர்ப்பாசன உதவியாளர்கட்கு தற்காலிக வசிப்பிடம் கட்டுவதற்கு 11.30 மணிவரை ரெண்டர்கள் பெற்றுக்கொள்வார்.

இரத்தினபுரி சிறு பகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக்கூடிய ரெண்டர் பத்திரங்களில் இருபிரதிகளில் சீலிடப்பட்ட கடித மூலம் ரெண்டர்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும். சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் யாவும் மேற்கூறிய காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் 25,000 ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப்படுத்தும் கொந்தராத்துக் காரருக்கு 25 ரூபாய் கச்சேரியில் கட்டி ரசீது பெற்று சமர்ப்பிப்பவர்கட்கு 20.4.1959 தொடக்கம் 8.5.1959 வரை ரெண்டர் பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்தராத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் கொந்தராத்துக்காரர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகஸ்தர்களிடமிருந்து வேலை நன்முறையில் நடைபெறுவதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப்பத்திரங்கள் பெற்று ரெண்டர் பத்திரங்களுக்கு மனுச் செய்யும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுப்பதற்கோ சகல உரிமையும் உடையது என இத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

நீர்ப்பாசன எஞ்சினியர்,
இரத்தினபுரி சிறுபகுதி.

---

### வித்தியா பகுதி

**சிங்கள வாசினைப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1958/59**

சிங்கள வாசினைப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக் கிழமை 1959 ம் ஆண்டு மே மாதம் 8 ந் திகதி மு. ப. 10.30. மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப எண்ணுவோர் " வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு, 2 மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும்; கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி 1959 ம் ஆண்டு மே மாதம் 7 ந் திகதிவரை சாதாரண கந்தோர் நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண் ஏப்றில் மீ 11 ந் உ.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

---

### வித்தியா பகுதி

**சிங்கள எண் புத்தகங்களும் சமயப் புத்தகங்களும் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1958/59**

சிங்கள எண் புத்தகங்களும் சமயப் புத்தகங்களும் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக் கிழமை 1959 ம் ஆண்டு மே மாதம் 8 ந் திகதி மு. ப. 10.30 மணி வரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப எண்ணுவோர் " வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ளவித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியே யுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு மே மாதம் 7 ந் திகதி வரை சாதாரண கந்தோர் நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண் ஏப்றில் மீ 11 ந் உ.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

# பொருட்கள் ஏல விற்பனை

## உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏல விற்பனை

பிக்கான் பிடிகள், மண்வெட்டிகள், மண்வெட்டிப் பிடிகள், ஒற்றைச் சக்கர வண்டிகள், மண்முதலியன அள்ளும் இரும்புச் சட்டிகள், சவள்கள், மோட்டார் உபகரணங்கள், டயர்கள், டியூப்கள் ஆகிய உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏலவிற்பனை நாரம்பிட்டி வேலையற்றோர் நிவாரண வேலைக்காரியாலத்தில் 1959 ம் ஆண்டு எப்பரில் மாதம் 24 ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்தப்படும்.

நல்ல நிலைமையிலுள்ள வெற்று எண்ணெய்ப் பீப்பாய்களும் ஏலத்தில் விற்கப்படும்.

நாரம்பிட்டி, வேலையற்றோர் நிவாரண வேலைக்காரியாலய மேற்பார்வை உத்தியோகத்தரின் அனுமதியுடன் வேலைநேரத்தில் மேற்கூறிய சாமான்களைப் பார்வையிடலாம்.

ஏலவிற்பனையின்போதே முழுத்தொகையும் செலுத்தப்படவேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
தொழில் அதிபர்.

தொழிற் பகுதி, கொழும்பு,
1959 ம் ஆண்டு எப்ரில் மீ 6 ந் உ.

# நானாவித அறிவித்தல்கள்

## பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை—பாடசாலைப்புத்தகங்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

1954 ம் ஆண்டு பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையால் வெளியிடப்பட்ட பாடப்புத்தக உபதொகுதியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பில் அளிக்கப்பட்ட அங்கீகாரங்கள் இவ்வாண்டு இறுதியில் முடிவுறும்.

இப்பாடப் புத்தகங்கள் பாடசாலைகளில் மேலும் உபயோகிப்பதற்கு சீர்தூக்கப்படல் வேண்டுமென விரும்பும் நூலாசிரியர்களும், பிரசுரிப்பாளர்களும் அப்புத்தகங்கள் தொடர்பில் அங்கீகாரத்தைப் புதுப்பித்தற்கு 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே அளிக்கப்பட்ட அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்காகப் புத்தகங்களை அனுப்பும்பொழுது பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை விதிகளின் பிரகாரம் ஒழுக வேண்டும் என்பதை அவதானிக்கவேண்டும். திருத்தியமைக்கப்பெற்ற சீர்தூக்கற்பண விகிதாசாரப்படி அனுப்பப்படும் புத்தகங்களுக்கு சீர்தூக்கற்பணம் அறவிடப்படும்.

குணபால சேனாதீர,
காரியதரிசி,
பாடநூற் பிரசுரஆலோசனைச் சபை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 11 ந் உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 27 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 9 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.